**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.18/2019**

வாதி சாட்சி 2 ரமேஷ் த/பெ.சண்முக நாய்க்கர்

20.06.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.தீ.சுகந்தமாலா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 2 ரமேஷ் அனுமதியின்பேரில் 1,2,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் 1ம் பிரதிவாதியின் சகோதரி ஆனந்தவள்ளியின் மகன் என்றால் ஆமாம். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றால் ஆமாம், அதனுடன் சேர்ந்து ரைஸ்மில் மற்றும் டிரான்ஸ்போர்ட் தொழிலும் செய்கிறேன். 3ம் பிரதிவாதியி செல்வியின் திருமணத்தின்போது அவருக்கு 50 பவுன் நகை போட்டதாக நான் சொல்வது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது போல் செல்வியின் திருமணத்தின் போது 50 பவுன் நகை போடவில்லை என்றும் 20 பவுன் நகை மட்டுமே போட்டு திருமணம் செய்துவைக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சித்ராவின் திருமணத்தின்போது அவருக்கு 50 பவுன் நகை போட்டதாக நான் சொல்வது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது போல் சித்ராவின் திருமணத்தின் போது 50 பவுன் நகை போடவில்லை என்றும் 20 பவுன் நகை மட்டுமே போட்டு திருமணம் செய்துவைக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதி கிருஷ்ணனுக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் இறந்த ராமசாமியின் வாரிசுகள் என்ற முறையில் சரிசமமான பாகஉரிமை உள்ளது என்றால் சரிதான். வாதி வழக்கு போடுவதற்கு முன்பு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நோட்டிஸ் அனுப்பினாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நோட்டிஸ் அனுப்புவதாக சொன்னார். வாதி இந்த வழக்கில் நோட்டிஸ் நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு

தெரியாது. 1,2 மற்றும் 4 பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தகவல் சொன்னார்கள். 1,2 மற்றும் 4 பிரதிவாதிகள் எதிருரையில் ஏற்கனவே வாதிக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்குமிடையில் சொத்துக்களை சரிசமமாக பாகம் பிரித்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான்.

5ம் பிரதிவாதி தணிகை அரசு என்பவரிடம் கடன் வாங்கி 4ம் பிரதிவாதியின் பெயரில் கேஸ் உரிமம் பெற்றதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதி அவரது பிரமாணவாக்குமூலத்தில் என்ன விவரங்கள் சொல்லியுள்ளாரோ அதே விவரங்களை நான் அப்படியே என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லியுள்ள விவரங்கள் உண்மையானவை என்பதால் அது அப்படியே வாதியின் பிரமாண வாக்குமூலத்தை ஒத்துள்ளது, அதனால் நான் கையெழுத்து போட்டேன். என் துாண்டுதலின் பேரில் தான் வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பொய். வழக்கு தாக்கல் ஆவதற்கு முன்பு நான் 1ம் பிரதிவாதி தனலட்சுமியிடம் ரியல் எஸ்டேட் போடுவதற்கு எல்லா சொத்துக்களையும் கொடுங்கள் என்று கேட்டேன் என்றும் அதற்கு 1ம் பிரதிவாதி மறுப்பு தெரிவித்ததால் நான் வாதியை துாண்டிவிட்டு அவர் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பொய், நான் 1ம் பிரதிவாதியிடம் சொத்து ரியல் எஸ்டேட்டிற்காக கேட்கவில்லை. வாதி இந்த வழக்கு தாக்கல் செய்து நடத்துவதற்கு அவருடைய பின்புலத்தில் நான் இருந்து உதவி செய்கிறேன் என்றால் வாதியின் வருமானத்தை பிரதிவாதிகள் தடுத்துவிட்டார்கள் அதனால் அவர் பணகஷ்டத்தில் இருப்பதால் அவருக்கு வழக்கு நடத்த பணஉதவி செய்கிறேன். நான் சொல்வது போல் வாதி பணகஷ்டத்தில் இல்லை என்றும் அவர் நல்லமுறையில் வசதியாக உள்ளார் என்றும் சொன்னால் பொய். 5

மற்றும் 6 பிரதிவாதிகள் கடன் கொடுத்ததாக இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றும் 5 மற்றும் 6 பிரதிவாதிகள் கடன் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் பொய்.

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதியும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் ஊரில் பஞ்சாயத்தார் வைத்து கூர்சீட்டு அடிப்படையில் பாகம் எழுதிகொண்டார்கள் என்றால் அது முற்றிலும் தவறு. அந்த கூர்சீட்டின் அடிப்படையில் பாகம் ஏற்பட்டு 2ம் பிரதிவாதிக்குண்டான கடன் தொகைகளை செலுத்தியதன் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து செட்டில்மண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது முற்றிலும் பொய். கூர்சீட்டு அடிப்படையில் பாகம் பிரிந்தது எனக்கு நான்றாக தெரியும் என்றும் ஆனால் இந்த வழக்கிற்காக அதை மறுத்து பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் எப்போதும் பாகம் பிரித்துக்கொள்ள தயாராக உள்ளார்கள் என்றும் அவர்கள் பாகம் பிரித்துக்கொள்ள மறுக்கவில்லை என்றும் ஆனால் வாதி தேவையில்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(3, 5 மற்றும் 7 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. அவர்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகவில்லை, அவர்கள் அழைக்கப்பட்டு தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டனர்)
மறுவிசாரணை இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.